# சுற்றுச் சூழல் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்




ஆசிரியர்:

**கலாநிதி பரீனா ருசைக்**

சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

fareena@geo.cmb.ac.lk

# உள்ளடக்கம்


முன்னுரை.................................................................... i

1. அறிமுகம்.................................................................... 6

2. சூழலில் உள்ள இறைவனின் படைப்புகள்.................................................................... 7

2.1 நில மேற்பரப்பில் உள்ள படைப்புகள்.................................................................... 7

i. பூமி.................................................................... 8

ii. மலைகள்.................................................................... 9

iii. மனிதன்.................................................................... 10

iv. பிற உயிரினங்கள்.................................................................... 11

2.2 நீரியல் சார் படைப்புக்கள்.................................................................... 12

i. நீரியல் வட்டம்.................................................................... 12

ii. கடல்.................................................................... 13

2.3 ஆகாயம் சார்ந்த படைப்புகள்.................................................................... 14

i. பிரபஞ்சம் (பெரு வெடிப்பு).................................................................... 14

ii. சூரியன்.................................................................... 15

iii. வானம்.................................................................... 15

3. சூழலியல் கூறுகளின் (நீர் கோளம், நிலக் கோளம், வளிக் கோளம்) முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள்.................................................................... 17

3.1 சூழலியல் பயன்கள்.................................................................... 17

3.2 சமூக - பொருளாதாரப் பயன்கள்.................................................................... 18

4. இஸ்லாம் கூறும் நிலைபேண் தன்மை 'Sustainability in Islam'.................................................................... 21

5. சூழலின் நிலைபேண் தன்மையின் புறக்கனிப்பும் ஏற்பட்டுள்ள விளைவுகளும் .......................... 22

6. முடிவுரை.................................................................... 26

## முன்னுரை

இன்றைய நவீன உலகில் சனத்தொகை அதிகரிப்பால் மனித தேவைகள் பண்மடங்கு அதிகரித்துள்ளன. இதனால் ஏற்பட்ட தொழில்நுட்ப விருத்தியும், அத்துமீறிய சுற்றுச்சூழல் சுரண்டலும் இப்பூவுலகில் எதிர்காலத்தில் மனித வாழ்வை கேள்விக்குறியாக்கியுள்ளன. தற்கால ஆரோக்கியம் மற்றும் எதிர்கால தலைமுறைக்கு நல்ல முறையில் கையளிக்கும் பல்வேறு முயற்சிகளை இன்றைய சமுதாயத்தில் நலன்விரும்பிகள் மேற்கொண்டு வருகின்றனர். சுற்றுச்சூழலின் வளப்பயன்பாடு மற்றும் அதன் பாதுகாப்பு தொடர்பாக எந்தவிதத்திலும் சூழல் மாசுபடுத்தப்படாத வளங்கள் தொடர்பான கண்ணோட்டம் வலுப்பெறாத 1400 வருடங்களுக்கு முன்பு வளங்களின் சிக்கனப் பயன்பாடு மற்றும் சூழற்தொகுதி பாதுகாப்பு குறித்து இஸ்லாம் மார்க்கம் எடுத்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இஸ்லாம் பரிபூரணமானதொரு மார்க்கமாகும். இது மனித வாழ்வியலோடு மாத்திரம் தொடர்பு பட்டதாகக் காணப்படவில்லை. இயற்கை சூழலோடும், சூழலில் உள்ள கூறுகளோடும் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. இஸ்லாம் சுற்றுச்சூழலை தூய்மையாக பேணுமாறும் பாதுகாக்குமாறும் வலியுறுத்துகின்றது. சூழல் பாதுகாப்பு சிக்கலான ளப்பயன்பாடு தொடர்பாக புனித நூலான ‘‘அல்-குர்ஆன்’’ மற்றும் இறைத்தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வியல் வழிமுறையை எடுத்தியம்பும் ‘‘அல்-ஹதீஸ்’’ என்பன எவ்வாறு கூறுகின்றன என்பது தொடர்பாக இந்நூலின் இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்துள்ளோம்.

அல் குர்ஆன் ஒரு விஞ்ஞான நூல் அல்ல, மெஞ்ஞான நூலாகும். மக்களை நேர்வழிப் படுத்துவதற்காகவும், இறைத்தூதர் மீது நம்பிக்கை கொள்வதற்காகவும் அத்தாட்சிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வத்தாட்சிகள் இன்றைய நவீன விஞ்ஞானத்தில் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு நிரூபிக்கப்பட்டவற்றை எம்மால் நூல் வடிவமாக்குவது என்பது சாத்தியக்குறைவாகும். எனவே சுற்றுச்சூழல் தொடர்பாக கருத்திற்கொண்டு சூழலியல் முக்கிய கூறுகள் மற்றும் அது தொடர்பான அம்சம் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

‘‘திருக் குர்ஆன்’’ மற்றும் ‘‘அல் ஹதீஸ்’’ களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைபேண் தன்மை தொடர்பாக எடுத்தியம்பப்பட்டுள்ள எண்ணக்கருக்களை உங்களிடம் இந்நூல் ஊடாக கொண்டு சேர்த்துள்ளோம் என நம்புகின்றோம்.

மத ரீதியாக சூழல் மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான விடயங்களைத் தொகுத்து, அதன் மூலம் மக்களை எவ்வாறு விழிப்பூட்டல் மற்றும் அறிவூட்டல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக சூழலின் ஆரோக்கியத்தினை மேன்படுத்தலாம் என்ற நோக்கில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட இச்செயற்றிட்டம் மிகவும் பாராட்டத்தக்கதொன்றாகும். இதன் அடிப்படையில் சுற்றுச்சூழல் தொடர்பாக இஸ்லாமிய கண்ணோட்டம் என்ன அது

எவ்வாறு அமையப் பெற்றுள்ளன, அனைத்து புவிவாழ் மக்களுக்கும் சிறந்ததொரு சூழல் வழிகாட்டியாகவுள்ளன என்பது தொடர்பாக எடுத்துக்காட்டுவதற்கும், இந்நூலின் ஆசிரியர்களிலொருவராக நானும் இணைய சந்தர்ப்பத்தினைத் கொடுத்த மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், இந்நூலை வடிவமைப்பதற்குத் தேவையான தகவல்களை சேகரிப்பதற்கும் அவற்றை ஒழுங்கமைத்து தட்டச்சு போன்ற உதவிகளை வழங்கிய கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உதவி விரிவுரையாளராக பணியாற்றும் செல்வி ரோஸ் நியாஸுக்கும், மற்றும் தட்டச்சு மற்றும் தொடர்புடை ஏனைய உதவிகளைப் புரிந்த உதவி விரிவுரையாளராக பணியாற்றும் பாதிமா நிஸா, மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முபஸ்ஸரா பேகம், பாதிமா சஸ்னா ஆகியோருக்கும் எனது மனமாந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி பரீனா ருஸைக்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

## சுற்றுச் சூழல் தொடர்பான இஸ்லாமிய அணுகுமுறை

**படைப்பு மற்றும் ஏகத்துவம்**

இஸ்லாம் சுற்றுச்சூழலின் கூறுகள் அனைத்தும் அல்லாஹ்வால் படைக்கப்பட்டுள்ளதொன விவரிக்கின்றது

↓

**மனிதன் மற்றும் சுற்றுச்சூழல்**

மனித குலம் சுற்றுச்சூழலை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை எடுத்தியம்புகின்றது

↓

**சுற்றுச்சூழல் தொடர்பான செயல்திறன் மற்றும் பராமரிப்பு**

இஸ்லாமிய போதனைகளானது சுற்றுச்சூழலை முன்கூட்டியே பாதுகாப்பதை கருத்தில் கொள்வதாகும்

↓

**சூழலை பேணுதல் மற்றும் பராமரித்தல்**

இஸ்லாமிய வழிகாட்டுதல்கள் அனைத்தும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்குவதாகும்

↓

**இறைத்தூதுவரின் வழிமுறை**

**சுற்றுச்சூழல் வாதம் இறைத்தூதுவரால் கற்பிக்கப்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளது**

## 1. அறிமுகம்

இஸ்லாம் எனப்படுவது பரிபூரணமானதொரு மார்க்கமாகும். எனவே தான் இஸ்லாமிய மூலாதாரமான அல்-குர்ஆன் மற்றும் அல்-ஹதீஸ் என்பன மனித வாழ்வியலுடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் வழிகாட்டுகின்றது. இவ்வழிகாட்டல், உலகம் படைக்கப்பட்டது முதல் உலக முடிவுவரைக்குமானதாகும். அந்தவகையில் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு கூறும் சக்தி மிக்க ஒரு இறைவனால் படைக்கப்பட்டுள்ளது என்பதை இஸ்லாம் எடுத்தியம்புகின்றது. இஸ்லாம் கூறும் மனித வாழ்க்கையானது இயற்கை சூழலுடன் பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகின்றது. மனிதன் இயற்கையின் ஒவ்வொரு அங்கம் மீதும் தேவையுடையவனாகக் காணப்படுகின்றான் என்பதையும், அவை ஒவ்வொன்றும் ஒரு நோக்கமின்றி வீணாகப் படைக்கப்படவில்லை என்பதையும் இஸ்லாம் தெள்ளத்தெளிவாக விவரிக்கின்றது. இறை வசனமான புனித அல்குர்ஆன் பல்வேறு வசனங்களினூடாக இதனை தெளிவுபடுத்துகின்றது.

இதனை நாம் நோக்க முன்னர் புனித திருக் குர்ஆன் ஒரு மெய்ஞான நூல் என்பதனை கருத்திற் கொள்வது மிக முக்கியமாகும். மக்களை இஸ்லாத்தின் பால் அழைப்பதற்கும் இஸ்லாத்தின் உண்மை தன்மையை உலகத்திற்கு பறைசாற்றுவதற்கும் கிட்டத்தட்ட ஆறாயிரத்திற்கு மேற்பட்ட அத்தாட்சிகளை திருக் குர்ஆன் கொண்டுள்ளது. அவற்றுள் பெரும்பாலானவை விஞ்ஞானம் சார்ந்ததாக காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் இன்று நவீன விஞ்ஞானத்தினால் நிரூபிக்கப்பட்டுள்ளன.

- ‘‘வானங்களையும், பூமியையும், அதற்கு மத்தியில் உள்ளவைகளையும் விளையாட்டுக்காக நாம் படைக்கவில்லை.’’ (அல்-குர்ஆன் 44:38)
- ‘‘நிச்சயமாக தக்க காரணத்திற்காகவே அன்றி, இவைகளை நாம் படைக்கவில்லை. எனினும், அவர்களில் பெரும்பாலானவர்கள் இதனை அறிந்துகொள்வதில்லை.’’ (அல்-குர்ஆன் 44:39)
- ‘‘வானங்களையும், பூமியையும், இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் வீணுக்காக நாம் படைக்கவில்லை.’’ (அல்-குர்ஆன் 38:27)

இவ் இறை வசனங்கள் படைப்புகள் ஒவ்வொன்றினதும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. மேலும் இவ்வசனங்கள் மூலம் பிரபஞ்சத்தின் படைப்புகள் அனைத்தும் காரண காரியங்களுக்காகவே படைக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

மனிதனை சூழ்ந்து காணப்படும் உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகள் அனைத்தும் ஒருங்கே சுற்றுச்சூழல் எனப்படுகின்றது. இந்த சுற்றுச்சூழலில் மனிதன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தங்கிவாழ்கின்றான். எனவே தான் இறைவன் அல்குர்ஆனில் மனிதன்

இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்கும், ஆசையூட்டி சிந்திக்கச் செய்வதற்கும் சுற்றுச்சூழலை உதாரணமாக காட்டியுள்ளான். எடுத்துக்காட்டாக

- ''இன்னும் சிந்திக்க விரும்புபவருக்கு, அல்லது நன்றி செலுத்த விரும்புபவருக்கு அவன்தான் இரவையும், பகலையும் அடுத்தடுத்து வருமாறு ஆக்கினான்'' (அல்குர்ஆன் 25:62) வசனத்தைக் குறிப்பிடலாம்.

## 2. சுற்றுச்சூழலில் உள்ள இறைவனின் படைப்புகள்

அல்லாஹ் மனிதனை படைப்பதற்கு முன்னரே அவனுக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் (நிலம், நீர், காற்று, நெருப்பு, கடல்கள், வானங்கள், மலைகள், தாவரங்கள், உயிரினங்கள்) அவனுக்காக படைத்துள்ளான். அவை இன்றி நம்மால் உயிர் வாழ முடியாது. இவற்றின் முக்கியத்துவத்தினை மனிதன் அறிந்து கொள்ளும் பொருட்டு அல்குர்ஆனில் பல இடங்களில் இவை தொடர்பாக குறிப்பிட்டுள்ளதோடு, அல்குர்ஆனின் பல அத்தியாயங்கள் சுற்றுச்சூழலில் உள்ளவற்றை பெயர்களாக கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக சூரா அல் அன்ஆம் (கால்நடைகள்), சூரா அல் அ.்.ராப் (சிகரங்கள்), சூரா அர்ர.்.து (இடி), சூரா அந்நஹ்ல் (தேனீ), சூரா அந்நம்ல் (எறும்புகள்), சூரா அல்கபூத் (சிலந்திப்பூச்சி), சூரா அல் அஹ்கா.்.ப் (மணல்மேடுகள்), சூரா அத்தூர் (மலை), சூரா அந்நஜ்ம் (நட்சத்திரம்), சூரா அல்கமர் (சந்திரன்), சூரா அல்புரூஜ் (கிரகங்கள்), சூரா அல்பஜ்ர் (விடியற்காலை), சூரா அஷ்ஷம்ஸ் (சூரியன்), சூரா அல்லைல் (இரவு), சூரா அள்ளுஹா (முற்பகல்), சூரா அல்.்.பீல் (யானை), சூரா அல்.்.பலக் (வைகறை), சூரா அந்நாஸ் (மனிதர்கள்) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

- அவன் தான் (பூமியையும்) பூமியிலுள்ள அனைத்தையும் படைத்தான். பிறகு, அவன் வானத்திற்கு மேல் (தனது தகுதிக்குத் தக்கவாறு) உயர்ந்து அதை ஏழு வானங்களாக அமைத்தான். மேலும், (அவற்றிலும் அகிலத்திலும் உள்ள) அனைத்தையும் அவன் நன்கறிந்தவனாவான். (அல்குர்ஆன் 2:29)

இந்த அடிப்படையில் எம்மை சூழவுள்ள படைப்புகள் தொடர்பாக அல்லாஹ் எவ்வாறு குறிப்பிடுகின்றான் என்பது தொடர்பாக பல்வேறு அல்குர்ஆன் வசனங்களின் ஊடாக அறிய முடிகின்றது.

### 2.1 நில மேற்பரப்பில் உள்ள படைப்புகள்

நில மேற்பரப்பு படைக்கப்பட்டிருக்கும் விதம் பற்றியும் ஏனைய படைப்புக்கள் பற்றியும் அல்லாஹ் திருக் குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்.

- ‘‘(அந்த நாயன்) எத்தகையவன் என்றால் வானங்கள், பூமி (ஆகியவற்றின்) ஆட்சி அவனுக்கே உரியது அவன் (தனக்கென) ஒரு மகனை எடுத்துக்கொள்ளவில்லை அவனுடைய ஆட்சியில் அவனுக்கு கூட்டாளி எவருமில்லை அவனே எல்லாப் பொருட்களையும் படைத்து, அவற்றை அதனதன் அளவு படி அமைத்தான’’. (அல்குர்ஆன் 25:02)
- ‘‘மேலும் பூமியை – நாமே அதை (விரிவாக்கி) விரித்திருக்கிறோம்: அதில் உறுதியான மலைகளையும் நாமே அமைத்தோம்: அழகான (புற்பூண்டுகளை) ஒவ்வொரு வகையிலிருந்தும் நாம் அதில் முளைப்பித்தோம்’’. (அல்குர்ஆன் 50:07)

இவ்வசனங்கள் புவிமேற்பரப்பிலுள்ள அனைத்தும் ஏகவல்ல இறைவனால் படைக்கப்பட்ட அருட்கொடைகளாகும் என்பதனை நிரூபிக்கின்றன. எனவே அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தி பாதுகாக்க வேண்டியது மனிதர்களின் கடமையாகும். அந்தவகையில் புவிமேற்பரப்பிலுள்ள பௌதீக அம்சங்கள் தொடர்பாக அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை விரிவாக நோக்கலாம்.

### i. பூமி

பதினாறாம் நூற்றாண்டு வரை பூமி தட்டையானது என்றே பலரும் கருதினர். ஆனால் ஐரோப்பிய மறுமலர்ச்சி காலத்தில் பல்வேறு நோக்கங்களுக்காக நாடுகாண் பயணங்களை மேற்கொண்ட ஐரோப்பியர்கள் உலகம் உருண்டையானது என கண்டறிந்தனர். 1597ல் பிரித்தானியாவைச் சேர்ந்த சேர் பிரான்ஸிஸ் டிரேக் (Sir Francis Drake) உலகை வலம் வந்து உலகம் உருண்டையானது என நிரூபித்தார். பிற்பட்ட காலங்களில் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் உருண்டையானது என பல்வேறு வழிகளிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அல்குர்ஆனில் இது தொடர்பாக குறிப்பிடுகையில்,

- ‘‘நிச்சயமாக அல்லாஹ் இரவைப் பகலில் புகுத்துகின்றான் பகலை இரவில் புகுத்துகின்றான்’’ (31:29).

இது இரவு பகல் சீராக மாறிவருவதை குறிக்கின்றது. இந்நிலை இப்பூமி உருண்டையாகும் பட்சத்திலேயே சாத்தியப்பாடானதாகும். ஆனால் உலகம் தட்டையாக காணப்படின் இரவு பகல் செயற்பாட்டில், இரவு பகலாக மாறும் போதோ அல்லது பகல் இரவாக மாறும் போதோ ஏற்படும் வெளிச்சத்தில் சடுதியான மாற்றம் நிகழும். எனவே உலகம் கோளவடிவாக இருக்கும் போதே இரவு பகல் சீரான இடை வெளியில் ஏற்படும். மேலும் அதனை வலுப்பிக்க,

- ‘‘வானங்களையும் பூமியையும் உண்மையை கொண்டு (தக்க காரணத்திற்காக) அவன் படைத்தான்: இரவை பகலின் மீது அவன் சுற்றுகின்றான் பகலை இரவின்

மீது சுற்றுகின்றான்: இன்னும் சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தி வைத்திருக்கின்றான்: (அவை) ஒவ்வொன்றும் குறிப்பிட்ட தவணை வரை நடக்கும்''(39:5)

இவ்வசனம் குறிப்பிடுவதாவது, அரபியில் பயன்படுத்தப்படும் சுற்றுதல் எனும் சொல்லின் அர்த்தம் கோளவடிவான பொருளை சுற்றுவதையே குறிக்கின்றது. இதன் மூலம் பூமி கோளவடிவமானது என்பதை புனித அல் குர்ஆன் விவரிக்கின்றது.

**ii. மலைகள்**

புவி மேற்பரப்பில் காணப்படும் மலைகளானது அற்புதமான ஒன்றாக காணப்படுகின்றது. இம்மமலைகளின் படைப்புகள் தொடர்பாக அல்லாஹ் புனித அல் குர்ஆனில் தெளிவுபடுத்துகின்றான். புவியோட்டில் காணப்படும் கவசத்தகடுகள் வருடம் ஒன்றிற்கு சராசரியாக 0.6cm தொடக்கம் 10cm தூரம் வரையில் நகர்ச்சியடைகின்றது. இவ்வாறு நகர்ச்சியடையும் கவசத்தகடுகள் ஒன்றையொன்று மோதும் போது கனமான கவசத்தகடு கீழ் நோக்கியும் கனம் குறைந்த கவசத்தகடு மேல்நோக்கியும் அசையும் இதன் போது மடிப்பு மலைகள் தோற்றம் பெறுகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக இமய மலையைக் குறிப்பிடலாம். இந்து - அவுஸ்திரேலிய கவசத்தகடும் யூரோ - ஆசிய கவசத்தகடும் ஒன்றை நோக்கி ஒன்று ஒருங்கியதன் விளைவாகவே இமய மலை தோற்றம் பெற்றுள்ளதாக இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது. இம்மலைகள் புவியோட்டிற்கு உறுதியை வழங்கும் ஆப்புகளாக தொழிற்படுகின்றது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

மலைகள் தொடர்பாக விஞ்ஞானிகள் குறிப்பிடும் போது மலைகளில் சிறிய பகுதியே புவி மேற்பரப்பிற்கு மேலுள்ளதாகவும் அதனை போன்று 15 மடங்கு பெரிய பகுதி நிலத்திற்கு கீழே உள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர். அதனை மலைகளின் வேர்களாக கருதுகிக்றனர். இதனை கலாநிதி பிரான்க் பிரஸ் 'Earth' எனும் தனது நூலில் மலைகளின் சிறிய பகுதியே வெளியில் தெறிவதாகவும் அதன் பெரும் பகுதியான வேர், நிலத்தினுள் காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார். மலைகளின் படைப்பு தொடர்பாக அல்குர்ஆன் குறிப்பிடும் போது,

- ''நாம் இப்பூமியை விரிப்பாக ஆக்கவில்லையா? இன்னும், மலைகளை முலைகளாக (ஆப்பு) ஆக்கவில்லையா?'' (78:6,7)

இங்கு முளைகள் என்பதை குறிக்கப்பயன்படும் அரபிச் சொல்லுக்கான அர்த்தம் கூடாரங்களை அமைக்கப்பயன்படும் ஆப்பு என்பதாகவும் அமையும். முலைகளை ஆப்பிற்கு உதாரணமாக நோக்கும் போது கூடாரங்கள் அமைக்கும் போது எவ்வாறு ஆப்பின் சிறிய பகுதி மேலேயும் பெருமளவான பகுதி பூமியினுள்ளேயும் இருக்குமோ அதைப்போன்றே மலைகளும் சிறிய பகுதி புவி மேற்பரப்பிலும் பெரிய பகுதி பூமியின் உட்பகுதியிலும் காணப்படுகின்றது என்பது இச்சிறிய வசனத்தின் மூலம் புலனாகின்றது. மேலும்

விஞ்ஞானிகளின் கருத்துப்படி மலைகளானது புவியோடு அசைவதில் இருந்து தடுக்கின்றது. கலாநிதி பிரான்க் பிரஸும் இக்கருத்தினை ஆதரிக்கின்றார். இது தொடர்பாக அல் குர்ஆன் குறிப்பிடுகையில்,

- ''உங்களைக் கொண்டு பூமி அசையாதிருப்பதற்காக அவன் அதன் மீது உறுதியான மலைகளை அமைத்தான்…'' (16:15).
- ''இன்னும், பூமியில் உறுதியான மலைகளை மனிதர்களை கொண்டு அது ஆடாமல் இருப்பதற்காக நாம் அமைத்தோம்'' (21:31).

### iii. மனிதன்

மனிதன் படைக்கப்பட்டதைப் பற்றி பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன.

- நிச்சயமாக நாம் (ஆதி) மனிதரைக் களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம். (அல்குர்ஆன் 23:12)
- பின்னர் நாம் (மனிதனைப் படைப்பதற்காக) அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். (அல்குர்ஆன் 23:13)
- பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம் பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம் பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம். பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம் பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன். (அல்குர்ஆன் 23: 14)
- (பின்னர் ஆண், பெண்) கலந்த ஓர் இந்திரியத் துளியைக் கொண்டு நிச்சயமாக நாம்தாம் மனிதனை படைத்தோம். அவனை நாம் சோதிப்பதற்காகவே, செவியுடையவனாகவும் பார்வையுடையவனாகவும் அவனை ஆக்கினோம். (அல்குர்ஆன் 76:2)
- மனிதர்களே! (இறுதித் தீர்ப்புக்காக நீங்கள்) மீண்டும் எழுப்பப்படுவது பற்றி சந்தேகத்தில் இருந்தீர்களானால், (அறிந்து கொள்ளுங்கள்) நாம் நிச்சயமாக உங்களை (முதலில்) மண்ணிலிருந்தும் பின்னர் இந்திரியத்திலிருந்தும், பின்பு அலக்கிலிருந்தும் பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைக் கட்டியிலிருந்தும் படைத்தோம் உங்களுக்கு விளக்குவதற்காகவே (இதனை விவரிக்கிறோம்): மேலும், நாம் நாடியவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருப்பப்பையில் தங்கச் செய்கிறோம் பின்பு உங்களை குழந்தையாக

வெளிப்படுத்துகிறோம். பின்பு நீங்கள் உங்கள் வாலிபத்தை அடையும்படிச் செய்கிறோம். அன்றியும், (இதனிடையில்) உங்களில் சிலர் மரிப்பவர்களும் இருக்கிறார்கள் (ஜீவித்து) அறிவு பெற்ற பின்னர் ஒன்றுமே அறியாதவர்களைப் போல் ஆகிவிடக்கூடிய தளர்ந்த வயது வரை விட்டுவைக்கப்படுபவர்களும் இருக்கிறார்கள் இன்னும், நீங்கள (தரிசாய்க் கிடக்கும்) வரண்ட பூமியைப் பார்க்கின்றீர்கள் அதன் மீது நாம் (மழை) நீரைப் பெய்யச் செய்வோமானால் அது பசுமையாகி, வளர்ந்து, அழகான (ஜோடி ஜோடியாகப்) பல்வகைப் புற்பூண்டுகளை முளைப்பிக்கிறது. (அல்குர்ஆன் 22:5)

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அல்குர்ஆன் வசனங்கள் மனிதன் கர்ப்பப்பையில் உருவானது முதல் இறக்கும் வரையில் சூழலில் அவனது பல்வேறு வளர்ச்சிப் பருவங்களையும் அழகான முறையில் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இவ்வளர்ச்சி முறை தற்காலங்களிலேயே விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

### iv. பிற உயிரினங்கள்

அல்குர்ஆனில் வெறுமனே மனிதனைப் பற்றி மாத்திரம் அல்லாமல் பிற உயிரினங்கள் தொடர்பாகவும் அவற்றின் பயன்கள் மற்றும் வாழ்க்கைமுறை தொடர்பாகவும் குறிப்பிடுவதன் மூலம் அவற்றின் முக்கியத்துவத்தையும் அதன் பின்னால் உள்ள அறிவியலும் விளக்கப்பட்டுள்ளது.

- மேலும், எல்லா உயிர்ப் பிராணிகளையும் அல்லாஹ் நீரிலிருந்து படைத்துள்ளான் அவற்றில் தன் வயிற்றின் மீது நடப்பவையும் உண்டு. அவற்றில் இரு கால்களால் நடப்பவையும் உண்டு. அவற்றில் நான்கு (கால்)களை கொண்டு நடப்பவையும் உண்டு. தான் நாடியதை அல்லாஹ் படைக்கிறான் நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 24:45)
- வானங்கள் பூமியில் உள்ளவையும் இறக்கைகளை விரித்த நிலையில் பறக்கும் பறவைகளும் அல்லாஹ்வைத் துதிக்கின்றன (அல் குர்ஆன் 24:41)
- இன்னும், குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச்செல்வதற்காகவும், அலங்காரமாகவும், (அவனே படைத்துள்ளான்) இன்னும், நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைக்கிறான். (அல்குர்ஆன் 16:8)
- “நாம் ஒட்டகத்தை எப்படி படைத்திருக்கிறோம் என்பதை நீங்கள் ஆராய வேண்டாமா?,,
- “தேனீயே! நீ ஒவ்வொரு பூக்களில் இருந்தும் புசித்து உனது இறைவன் உனக்கு அறிவித்த எளிதான வழியில் உன்னுடைய கூட்டுக்குள் ஒடுங்கிச்செய். இதனால் அதன் வயிற்றிலிருந்து பல நிறங்களையுடைய பானம் (தேன்) வெளியாகின்றது.

அதில் மனிதர்களுக்கு நிவாரணம் உண்டு. நிச்சயமாக இதிலும் சிந்திக்க கூடிய மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கின்றது,, (அல்குர்ஆன் 16:69).

- “வீடுகளில் எல்லாம் மிக்க பலவீனமானது நிச்சயமாக சிலந்திப்பூச்சியின் வீடு தான்,, (அல்குர்ஆன் 28:41).
- மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது. இன்னும், அவர்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போனால் அவர்களால் அதனை அந்த ஈயிடத்திலிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது. தேடுவோனும், தேடப்படுவோனும் பலவீனர்களே. (அல்குர்ஆன் 22:73).

எறும்பையும், அதன் அறிவையும், ஆற்றலையும், அறிவுசால் திறனையும், ஒன்றுபட்டு வாழும் வாழ்வியலையும், பாதுகாப்பு உணர்வையும் அறிந்து கொள்வதற்கென எறும்புகள் எனும் அத்தியாயமே அருள்மறையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

- ‘‘ஆகாய வெளியில் வசப்படுத்தப்பட்ட நிலையில் பறவைகளை அவர்கள் பார்க்கவில்லையா?...’’,(16:79)
- ‘‘அவர்களுக்கு மேலே பறவைகள் (சிறகுகளை) விரித்தும் மடக்கியும் இருப்பதை அவர்கள் காணவில்லையா?

இவ்வசனத்தில் மிகப்பெரிய அறிவியல் உண்மை உள்ளடங்கியுள்ளது. புவி சுழற்சி மற்றும் சுற்றுகை பற்றி யாவரும் அறிந்துள்ளோம். எனவே பறவைகள் வானில் பல மைல் தூரம் பறக்கும்போது அவை புவியிலுள்ளவற்றின் மீது மோதிவிடலாம். ஆனால் புவி ஈர்ப்புவிசை காரணமாக அவை அவ்வாறு மோதாமல் கடல் தாண்டி பல மைல்தூரம் தமது பாதையில் பறக்கின்றன என்பதனையே இவ்வாறு வசப்படுத்தி வைத்துள்ளதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. இந்த அடிப்படையில் இப்பூமியில் காணப்படும் அனைத்து உயிரினங்கள் பற்றியும் அல்குர்ஆன் விளக்கி நிற்பதை காணக் கூடியதாக உள்ளது.

## 2.2 நீரியல் சார் படைப்புக்கள்

### i. நீரியல் வட்டம்

மேலும் அல்லாஹ் அல்குர்ஆனில் மழை, நீரியல் வட்டம், கடல்கள், இரு கடல்களுக்கிடையிலான தடுப்பு, ஆறுகள், நதிகள், நீர்வீழ்ச்சிகள், நீர்வாழ் உயிரினங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளான்.

- அ(ந்த இறை)வனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்திலிருந்தும் மழை பொழியச்செய்து அதனின்று

உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான் (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள். (அல்குர்ஆன் 2:22)

- ''வானத்திலிருந்து, மிக்க பாக்கியமுள்ள (மழை) நீரையும் நாம் இறக்கி வைத்தோம்: பின்னர், அதனைக் கொண்டு (பல) சோலைகளையும், அறுவடை செய்யப்படும் தானிய மணிகளையும் முளைக்கச் செய்தோம்.'' (அல்குர்ஆன் 50:09)
- ''பூமிக்குள் நுழைகின்றதையும், அதிலிருந்து வெளிப்படுகின்றதையும், வானத்திலிருந்து இறங்குகின்றதையும், அதில் ஏறுகின்றதையும் அவன் அறிவான்: மேலும், அவன் மிகக் கிருபையுடையவன்: மிக்க மன்னிப்பவன்''. (அல்குர்ஆன் 34:02)
- ''அல்லாஹ் தான், காற்றுக்களை அனுப்பி (அவற்றால்) மேகத்தை ஓட்டி, பிறகு அதைத் தான் நாடியபடி, வானத்தில் பரத்தி, பல துண்டங்களாகவும் ஆக்கி விடுகின்றான். அதன் மத்தியஙிலிருந்து நீர் வெளியாவதை நீர் பார்க்கின்றீர் …..''(அல்குர்ஆன் 30:48)

இப்பூமியில் நீரியல் வட்டத்தின் அத்தியாவசியம் மற்றும் அதன் செயற்பாடு தொடர்பாக இன்றைய விஞ்ஞானம் தெளிவுபடுத்துகின்றது. ஆனால் இந்நீரியல் வட்ட செயன்முறை தொடர்பாக விஞ்ஞானம் விருத்தியடையாத 14ம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே இஸ்லாம் கூறியள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**ii. கடல்**

இரு பெரும் கடல்கள் சந்திக்கும் இடங்களில் தடுப்பு காணப்படுவதாக இன்றைய நவீன விஞ்ஞானம் குறிப்பிடுகின்றது. இருவேறு கடல்களுக்கு இடையில் காணப்படும் தடுப்பின் கரணமாக அவ்விரு கடல்களும் இவற்றுக்கே உரிய வெப்பம், pH, உப்பு, அடர்த்தி, கடத்தும் திறன் மற்றும் செறிவு ஆகிய தனித்தன்மையில் மாற்றம் இன்றி காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர். இதனை Richard A Davis அவரது நூலான 'Principles of Oceanography' இல் குறிப்பிட்டுள்ளார். இதனையே அல்லாஹ் அல்குர்ஆனில் ஸூரா அர்ரஹ்மான் வசனம் 19 மற்றும் 20 களில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

- ''அவனே, இரு கடல்களையும் ஒன்றோடொன்று சந்திக்கச் செய்தான். (ஆயினும்) அவற்றிடையே ஒரு தடுப்பும் இருக்கிறது, அதைனை அவை மீறமாட்டா''(55:19,20).

கடல்களுக்கு இடையில் காணப்படும் தடுப்பு தொடர்பாக மத்திய தரைக்கடல் மற்றும் அத்திலாந்ததிக் கடல் சந்திக்கும் ஜிபரோல்டரின் பகுதியில் இன்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

### 2.3 ஆகாயம் சார்ந்த படைப்புகள்

#### i. பிரபஞ்சம் (பெரு வெடிப்பு)

பிரபஞ்சத்தின் உருவாக்கம் மற்றும் அதன் இயக்கம் தொடர்பாக 20ம் நுற்றாண்டின் பின் விஞ்ஞான ரீதியாக பல்வேறு ஆதாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் அவை தொடர்பாக 1400 வருடங்களுக்கு முன் புனித குர்ஆன் பிரபஞ்சத்தின் படைப்பு மற்றும் அதன் இயக்கம் தொடர்பாக விளக்கியுள்ளதை அவதானிக்க முடியும். உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாகிய ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் 1915இல் ஈர்ப்புவிசை குறித்து தனது பொது சார்பியல் தத்துவத்தை வெளியிட்டார். அதில் விண்வெளியில் சூரியன் போன்றுள்ள நட்சத்திரங்கள் தங்கள் வாழ்வின் இறுதியில் கருந்துளைகளாக மாறும், இதையடுத்து உருவாகும் மாபெரும் வெடிப்பின்போது 'Big bang' வலுவான ஈர்ப்பு விசை அலைகள் உருவாகும் என்றார்.

- ''நட்சத்திரங்கள் (விழுந்து) மறையும் இடங்கள் மீது நான் சத்தியம் செய்கின்றேன். நீங்கள் அறிந்திருந்தால், நிச்சயமாக இது மகத்தானதொரு சத்தியமென்பதை தெரிந்து கொள்வீர்கள்.'' (56:75,76)

விஞ்ஞானிகள் பிரபஞ்சத்தின் உருவாக்கத்தை ''பெரு வெடிப்பில்'' (Big Bang) இருந்து விளக்க முட்படுகின்றனர். ஆரம்பத்தில் ஒரே ஒரு நட்சத்திரம் காணப்பட்டதாகவும் அது காஸ்மிக் பெருவெடிப்பு நிகழ்ந்து பிளவடைந்து இன்றைய நட்சத்திரங்கள் மற்றும் பூமியும் உருவானதாக கருதப்படுகின்றது. இப்பெரு வெடிப்பு கொள்கை உருவாக்கப்பட்டது 1930களின் பின்னராகும். ஆனால் 1400 வருடங்களுக்கு முன் இது தொடர்பாக திருக்குர்ஆன் ஸூரதுன் அன்பியாவில்,

- ''மேலும் நிச்சயமாக வானங்களும், பூமியும் (ஆரம்பத்தில்) ஒன்றாய் இணைந்தவையாக (மூடி) இருந்தன: பிறகு இவ்விரண்டையும் நாம் பிரித்துத் திறந்தோம்'' (21:30)

என குறிப்பிடுகின்றது. இவ்வசனம் பெரு வெடிப்பு நிகழ்வை விளக்கி நிற்பதை காணக்கூடியதாக உள்ளது. மேலும் ஞாயிற்றுத் தொகுதியில் கோள்கள் குறிப்பிட்ட சுற்றுவட்டப் பாதையில் பயனிக்கின்றன என்பதனை பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

- ''வான (மண்டல)த்தில் கோளங்கள் சுழன்றுவரும் பாதைகளை உண்டாக்கி, அவற்றிடையே ஒரு விளக்கை (சூரியனை)யும்: ஒளிவான சந்திரனையும் உண்டாக்கினானே அவன் பாக்கியமுள்ளவன்''. (அல்குர்ஆன் 25:61)

இவ்வசனத்தின் மூலம் இன்று விஞ்ஞானம் ஏற்றுக் கொள்ளும் சூரியனை மையமாக கொண்டு கோள்கள் சுற்றி வருகின்றது எனும் சூரிய மைய கோட்பாடு தெளிவுபடுத்தப்படுகின்றது.

### ii. சூரியன்

நாம் அண்மை காலம் வரையில் சூரியன் நிலையான ஓர் இடத்தில் நிலைத்திருக்க கிரகங்களும் துணைக்கோள்களும் அதனை வளம் வந்த வண்ணம் உள்ளதாக அறிந்திருந்தோம். ஆனால் அண்மைய விஞ்ஞான கண்டுபிடிப்புகளின் படி சூரியன் மற்றும் அதனை மையமாக கொண்ட கோள்கள் சீரான வேகத்தில் அதன் பாதையில் பயணிப்பது கண்டறியப்பட்டுள்ளது. அல்குர்ஆன் இதனை குறிப்பிடும் போது,

- ‘‘இன்னும், அவன்தான் இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் படைத்தான்: அவை ஒவ்வொன்றும் (அவற்றுக்குரிய பாதையில்) வானில் நீந்திச் செல்கின்றன’’ (அல்குர்ஆன் 21:33).
- ‘‘சூரியன் சந்திரனை எட்டிவிட முடியாது: இன்னும் இரவு பகலை முந்திவிடவும் முடியாது: ஒவ்வொன்றும் அதனதன் வட்டத்தில் நீந்திச் செல்கின்றன’’ (அல்குர்ஆன் 36:40)
- ‘‘சூரியன் அதற்று நிர்ணயிக்கப்பட்ட இடத்திற்கு செல்கின்றது: இது முற்றும் அறிந்தவன் யாவற்றையும் மிகைத்தவனாகிய நாயனின் ஏற்பாடாகும்’’( அல்குர்ஆன் 36:38)

இவ் வசனங்கள் மூலம் சூரியன் பயணிக்கின்றது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

### iii. வானம்

அல்குர்ஆன் அல்லாஹ்வின் ஆகாயம் சார்ந்த படைப்புக்கள் பற்றி பின்வருமாறு கூறுகின்றது,

- அவனே (இறைவேனே) வானங்களையும், பூமியையும், அவற்றுக்கு இடைப்பட்டவற்றையும் படைத்தான். (அல்குர்ஆன் 25:59).
- அவனே இரவையும், பகலையும் சூரியனையும், சந்திரனையும் படைத்தான். ஒவ்வொன்றும் வான்வெளியில் நீந்துகின்றன. (குர்ஆன் 21:33).
- ‘‘பிறகு அவன் வானம் புகையாக இருந்த போது அதைப் படைக்க நாடினான்…’’ (அல் குர்ஆன் 41:11).
- (வழிகாட்டும்) அடையாளங்களையும் (வழி காட்டுவதற்காக அவன் அமைத்துள்ளான்) நட்சத்திரங்களைக் கொண்டும் (பிரயாணிகளாகிய) அவர்கள் வழிகளை அறிந்து கொள்கிறார்கள்.

- நிச்சயமாக, வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்தமைத்தோம் என்பதையும், இறை நிராகரிப்பாளர்கள் காணவில்லையா?…'' (அல் குர்ஆன், 21:30).
- அவன் வானங்களை தூண்களின்றியே படைத்துள்ளான். அதனை நீங்களும் பார்க்கிறீர்கள்.'' (அல்குர்ஆன் 31:10).
- ''அல்லாஹ் அவன் எத்தகையவன் என்றால் அவன் வானங்களை தூண்கள் இன்றியே உயர்த்தியுள்ளான். அதை நீங்கள் பார்க்கிறீர்கள்.'' (சூறா அர் ர.்.து 13:2).
- ''(எவரது உதவியுமின்றி) எம் கைகளினாலே நாம் வானத்தை அமைத்தோம். மேலும் நாம் அதனை விரிவாக்கிக்கொண்டே இறுக்கின்றோம்.'' (51:47).
- சூரியன் அதற்குரிய இடத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது இது யாவரையும் நன்கறிந்தவனாகிய மிகைத்தவனுடைய ஏற்பாடாகும. (குர்ஆன் 36:38).
- 'ஏழு வானங்களையும் அல்லாஹ் அடுக்கடுக்காய் எப்படிப் படைத்திருக்கின்றான் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? இன்னும் அவற்றில் சந்திரனைப் ஒளியாகவும், சூரியனை விளக்காகவும் அமைத்தான். (குர்ஆன் 71 : 15-16)

வானம் ஏழு அடுக்குகளாக படைக்கப்பட்டுள்ளதாக குர்ஆன் பல இடங்களில் கூறியுள்ளதை நோக்கலாம்.

- அவனே பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான். பினனர் வானத்தை (படைக்க) நாடி அவற்றை ஏழு வானங்களாக ஒழுங்காக்கினான். அவன் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவன். (குர்ஆன் 2:29).
- 'இரண்டு நாட்களில் ஏழு வானங்களை அமைத்தான். ஒவ்வொரு வானத்திலும் அதற்குரிய கடமை அறிவித்தான்...(அவற்றை) பாதுகாக்கப்பட்டதாக (ஆக்கினோம்). இது அறிந்தவனாகிய மிகைத்தவனின் ஏற்பாடாகும் (குர்ஆன் 41:12).
- மேலும் உங்களுக்குமேல் பலமான ஏழுவானங்களை உண்டாக்கினோம். ஒளிவீசும் விளக்கை அமைத்தோம். (குர்ஆன் 78:12-13).
- 'ஏழு வானங்களை அல்லாஹ் எவ்வாறு அடுக்கடுக்காய் படைத்துள்ளான் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? (குர்ஆன் 71:15).
- ''அவனே ஏழு வானங்களையும் அடுக்கடுக்காக படைத்தான்...... (குர்ஆன் 67:3).
- ''வானத்தை பாதுகாக்கப்பட்ட முகடாகவும் நாம் ஆக்கினோம் ….''(அல்குர்ஆன் 21:32)

இவ்வசனமானது வளிமண்டலத்திலுள்ள ஓசோன் படை புவியை புறஊதாக் கதிர்களில் இருந்து பாதுகாக்கும் பணியை மேற்கொள்வதை குறிப்பிடுகின்றது. அல்குர்ஆனில் வானத்தின் படைப்பு தொடர்பாக தெளிவாக விளக்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

## 3. சூழலியல் கூறுகளின் (நீர் கோளம், நிலக் கோளம், வளிக் கோளம்) முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள்

### 3.1 சூழலியல் பயன்கள்

சூழலில் காணப்படும் ஒவ்வொரு கூறும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. சுற்றுச் சூழலில் காணப்படும் அனைத்து கூறுகளில் இருந்தும் மனிதனும் ஏனைய ஜீவராசிகளும் ஏதோ ஒரு வகையில் தங்கி வாழ்பவையாக காணப்படுகின்றன. இக்கூறுகளில் ஒன்று பாதிப்படையுமிடத்து அல்லது அற்றுப்போகுமிடத்து ஏனைய அனைத்து கூறுகளும் பாதிப்படையும். இதனையே அல்லாஹுஃத்தஆலா அல்குர்ஆனில் ஸூரா துகானில் வசனம் 38 இல் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

- ''வானங்களையும் பூமியையும் அதிலுள்ளவைகளையும் விளையாட்டுக்காக நாம் படைக்கவில்லை'' (அல்குர்ஆன்-44:38).

இவ்வசனம் மூலம் அல்லாஹ்வின் படைப்புகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் முக்கியத்துவம் கொண்டதாக காணப்படுகின்றமை புலனாகின்றது. சூழலில் காணப்படும் கூறுகள் அனைத்தும் சூழலியல் ரீதியாகவும், சமூக, பொருளாதார ரீதியாகவும் பல்வேறு முக்கியத்துவம் கொண்டதாக காணப்படுகின்றது. இவை எவ்வாறு சூழலியல் ரீதியாகவும் சமூக பொருளாதார அடிப்படையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது என்பது தொடர்பாக இஸ்லாம் எவ்வாறு குறிப்பிடுகின்றது என்பதை எம்மால் நோக்க முடியும். இதற்கு முன்னர் நாம் பார்த்த இறைவனின் படைப்புகள் தொடர்பான பகுதிகளில் இறைவனின் படைப்புக்கள் ஒவ்வொன்றினதும் அமைப்பு மற்றும் அவை சூழலியல் ரீதியாக எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பது தொடர்பாக குறிப்பிடுகின்றோம். பிரபஞ்சம் மற்றும் பூமி மனிதனின் நிலைத்திருப்பிற்கு ஏற்ற வகையில் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் பூமியில் உள்ள ஒவ்வொரு உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளும் படைக்கப்பட்டதன் நோக்கம் பற்றியும் நாம் மேலே விரிவாக நோக்கியுள்ளோம்.

இங்கு பொதுப்படையாக சூழலியல் கூறுகளின் முக்கியத்துவம் தொடர்பாக குறிப்பிடப்படும் அம்சம் தொடர்பாக நோக்கப்படுகின்றன.

- ''நிச்சயமாக வானங்களையும், பூமியையும் (அல்லாஹ்) படைத்திருப்பதிலும் இரவும், பகலும் மாறி, மாறி வந்து கொண்டிருப்பதிலும் மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும் வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமியை இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும் அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச்செய்வதிலும் வானத்திற்கும், பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும்

- சிந்தித்துணரும் மக்களுக்கு (அல்லாஹ்வுடைய வல்லமையையும், கருணையையும் எடுத்துக் காட்டும்) சான்றுகள் உள்ளன. (அல் குர்ஆன் 2:162).

இவ் அல்குர்ஆன் வசனத்தின் மூலம் படைப்புக்கள் அனைத்தும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

- ‘‘நிச்சயமாக நாமே மழையை நன்கு பொழியச் செய்கிறோம். பின், பூமியைப் பிளப்பதாகப் பிளந்து பின் அதிலிருந்து வித்தை முளைப்பிக்கிறோம். திராட்சைகளையும், புற்பூண்டுகளையும் ஒலிவ் மரத்தையும், பேரீச்சையையும் அடர்ந்த தோட்டங்களையும், பழங்களையும், தீவனங்களையும் (இவையெல்லாம்) உங்களுக்கும், உங்கள் கால் நடைகளுக்கும் பயனளிப்பதற்காக’’(அல் குர்ஆன் 80:25,26,27,28,29,30,31,32).

எனும் வசனத்தின் மூலம் மழை மற்றும் அதன் மூலம் கிடைக்கும் அறுவடை தொடர்பாகவும் விளக்கப்பட்டுள்ளது.

## 3.2 சமூக - பொருளாதாரப் பயன்கள்

(உதாரணம்: உணவுப் பொருட்கள், மருந்து மூலிகைகள், மற்றும் பல இயற்கை வளங்கள்)

சுற்றுச்சூழலில் காணப்படும் ஒவ்வொரு கூறும் மனிதனுக்கு சமூக பொருளாதார ரீதியிலும் பயன் உடையவையாக காணப்படுகின்றது.

- “ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய கால்நடைகளிலும் உங்களுக்கு ஓர் படிப்பினை உண்டு. இரத்தத்திற்கும், சாணத்திற்கும் இடையில் அதன் வயிற்றிலிருந்து பாலை உற்பத்தி செய்து நாம் உங்களுக்கு புகட்டுகிறோம். அது அருந்துபவர்களுக்கு மிக்க இன்பகரமானது,, (அல்குர்ஆன் 16:66).

இவ்வசனம் மூலம் மனிதன் வளர்ப்பு பிராணிகள் மூலம் எந்த அளவு பயனை பெற்றுக் கொள்கின்றான் என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

- கால் நடைகளையும் அவனே படைத்தான் அவற்றில் உங்களுக்குக் கத கதப்பு(ள்ள ஆடையணிகளு)ம் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கிறீர்கள். (அல்குர்ஆன் 16:5)
- அவற்றை நீங்கள் மாலை நேரத்தில் (வீட்டுக்குத்) திரும்பி ஓட்டி வரும் போதும், காலை நேரத்தில் (மேய்ச்சலுக்காக) அவிழ்த்துவிடும் போதும், அவற்றில் உங்களுக்கு(ப் பொலிவும்) அழகுமிருக்கிறது. (அல்குர்ஆன் 16:6)

- மேலும், மிக்க கஷ்டத்துடனன்றி நீங்கள் சென்றடைய முடியாத ஊர்களுக்கு அவை உங்களுடைய சுமைகளைச் சுமந்து செல்கின்றன - நிச்சயமாக உங்களுடைய இறைவன் மிக இரக்கமுடையவன் அன்பு மிக்கவன். (அல்குர்ஆன் 16:7)

மேலும் மழையை பொழியச் செய்வதன் மூலம் பூமியில் உற்பத்தியாகும் உணவுப் பொருட்கள் பற்றியும் அல்குர்ஆன் பின்வரும் வசனம் மூலம் குறிப்பிடுகின்றது.

- ‘‘அவனே வானத்திலிருந்து மழையைப் பொழியச் செய்கிறான் அதிலிருந்து உங்களுக்கு அருந்தும் நீரும் இருக்கிறது அதிலிருந்து (உங்கள் கால்நடைகளை) மேய்ப்பதற்கான மரங்கள் (மற்றும் புற்பூண்டுகளும் உண்டாகி) அதில் இருக்கின்றன’’ (அல்குர்ஆன் 16:10).
- அதனைக் கொண்டே, (விவசாயப்) பயிர்களையும், ஒலிவன்(ஜைத்தூன்) மரத்தையும், பேரீத்த மரங்களையும், திராட்சைக் கொடிகளையும், இன்னும் எல்லாவகைக் கனிவர்க்கங்களிலிருந்தும் அவன் உங்களுக்காக விளைவிக்கிறான் - நிச்சயமாக இதில் சிந்திக்கும் மக்கள் கூட்டத்தாருக்கு(த் தக்க) அத்தாட்சி இருக்கிறது. (அல்குர்ஆன் 16:11)
- இன்னும் அவனே இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்க(ள் நலன்க)ளுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான் அவ்வாறே நட்சத்திரங்களும் அவன் கட்டளைப் படியே வசப்படுத்தப்பட்டுள்ளன - நிச்சயமாக இதிலும் ஆய்ந்தறியக் கூடிய மக்கள் கூட்டத்தாருக்கு(த் தக்க) அத்தாட்சிகள் இருக்கின்றன. (அல்குர்ஆன் 16:12)
- நீங்கள் கடலிலிருந்து நய(மும், சுவையு)முள்ள மீன் போன்ற மாமிசத்தை புசிப்பதற்காகவும், நீங்கள் அணிந்து கொள்ளக்கூடிய ஆபரணத்தை அதிலிருந்து நீங்கள் வெளிப்படுத்தவும் அவன் தான் அதனையும் (கடலையும்) வசப்படுத்தித் தந்தான் இன்னும் அதில் தண்ணீரைப் பிளந்து கொண்டு செல்லும் கப்பலை நீங்கள் காணுகிறீர்கள் (பல்வேறு இடங்களுக்குச் சென்று) அவன் அருட்கொடையை நீங்கள் தேடவும், நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டும் (அதை) இவ்வாறு வசப்படுத்திக் கொடுத்தான். (அல்குர்ஆன் 16:14).

இவ்வசனத்தின் மூலம் கடலில் இருந்து பெற்றுக்கொள்ளும் பல்வகை பயன்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

- இன்னும், பூமியில் அவன் படைத்திருப்பன பல விதமான நிறங்களையுடைய (செடி கொடிகள், பிராணிகள், பறவைகள், போன்ற)வையுமாகும் நிச்சயமாக இதில் (அல்லாஹ்வின் அருள் கொடைகளை நன்றியுடன்) நினைவு கூரும் மக்களுக்கு(த் தக்க) அத்தாட்சியுள்ளது. (அல்குர்ஆன் 16:13)

அல் குர்ஆனில் பல்வேறு இடங்களில் பல்வேறு பொருட்களின் மருத்துவ குணம் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மர்யம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பிரசவ வேதனையால் அவதிப்பட்டபோது அவர்களுக்கு கூறிய மருத்துவ ஆலோசனையை பற்றி அல்லாஹ் அல் குர்ஆனில் கூறும்போது:

- "(மர்யமே!) கவலைப்படாதீர்கள்! உம்முடைய இறைவன் நிச்சயமாக உமக்கு கீழாலேயே ஒரு சின்ன ஆற்றை உண்டாக்கியிருக்கின்றான்"(19:24)
- "இன்னும் இப்பேரீச்ச மரத்தின் கிளையை, நீங்கள் உங்கள் பக்கம் பிடித்து (இழுத்து)க் குலுக்குங்கள். அது பழுத்த பழங்களை உங்கள் மீது சொரியும். (அப்பழங்களை) நீங்கள் புசித்து (இந்த ஊற்றின் நீரைக்) குடித்து (இக்குழந்தையைக் கண்டு) நீங்கள் (உங்கள்) கண் குளிர்ந்திருங்கள்!" (அல் குர்ஆன் 19:25,26)

இங்கு சூரா மர்யமில் குறிப்பிடப்பட்டுள்ள இவ்வசனங்களை சற்று ஆழமாக ஆராயும் போது சுற்றுச் சூழலில் காணப்படும் மருத்துவப் பயன்களின் சிலவைகள் பின்வரும் மருத்துவ அறிவியல்கள் மூலம் தெளிவாகின்றன.

1. தண்ணீரில் பிரசவம் நடந்தால் பிரசவ வேதனை குறையும்.
2. பிரசவத்தின் போது நீர் பருகினால் பிரசவம் வேகமாக இலகுவாக முடியும்.
3. பிரசவத்தின் போது தண்ணீர் பருகுவதனால் தாய்ப்பால் சுரக்கும் ஹோர்மோன்கள் அதிகம் சுரந்து தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.
4. பெண்ணிற்கு பிரசவத்தின் போதும் அதன் பின்னரும் இரும்புச் சத்து 'Hemoglobin' அதிகம் அவசியம். எனவே அதிக இரும்புச் சத்துள்ள பேரீச்சம் பழம் உண்ணுமாறு அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. மேலும் அஜ்வா பேரிச்சம்பழம் சுவர்க்கத்து பழமாகும். அதில் விஷத்திற்கு நோய் நிவாரணம் உண்டு" (நூல் - திர்மிதி - பாகம் 4 : அத்தியாயம் 2 : எண் 2066) என்ற நபிமொழியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தேன் மற்றும் ஒலிவத்தின் மருத்துவ குணம் தொடர்பாக பின்வரும் திருமறை வசனம் குறிப்பிடுவதாவது.

- "உங்களது இறைவன் தேனீக்கு மலைகளிலும், மரங்களிலும், மக்கள் கட்டும் கட்டிடங்களிலும் கூடுகளை அமைத்துக் கொள்ளும்படி அறிவூட்டினான். அன்றி "நீ ஒவ்வொரு புஷ்பத்திலிருந்தும் புசித்து, உனதிறைவன் உனக்கு அறிவித்த எளிதான வழியில் (உன்னுடைய கூட்டுக்குள்) ஒடுங்கிச் செல் (எனக் கட்டளையிட்டான்.) இதனால் அதன் வயிற்றிலிருந்து பல நிறங்களையுடைய ஒரு பானம் (தேன்) வெளியாகின்றது. அதில் மனிதர்களுக்கு நிவாரணமுண்டு." (அல் குர்ஆன் 16 : 68,69)

- ✓ நபிகள் நாயகம் ﷺ அன்னவர்கள் கூறினார்கள்: "ஜைத்தூன் எண்ணெய்யை (பயன்படுத்தி) சாப்பிடுங்கள். அதன் எண்ணெய்யை தேய்த்துக்கொளுங்கள். நிச்சயமாக அது ஒரு அருள் வளம் பெற்ற மரத்தில் இருந்து உண்டாகிறது" (நூல் - திர்மிதி - பாகம் 3 : அத்தியாயம் 23 : எண் 1852 இப்னு மாஜா - பாகம் 1 : அத்தியாயம் 29 : எண் 3319).
- ✓ மேலும் அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபிகள் நாயகம் ﷺ அன்னவர்கள் கூறினார்கள்: "ஜைத்தூன் எண்ணெய்யை (பயன்படுத்தி) சாப்பிடுங்கள். அதன் எண்ணெய்யை தேய்த்துக்கொளுங்கள். ஏனெனில், அதில் எழுபது வியாதிகளுக்கு நிவாரணம் உண்டு. அதில் ஒன்று குஷ்டரோகம்" (நூல் - அபூ நையிம்)

இந்த அடிப்படையில் சூழலில் காணப்படும் கூறுகள் சூழலியல் ரீதயாகவும் சமூக, பொருளாதார ரீதியாகவும் எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது என்பது தொடர்பாகவும் திருக் குர்ஆன் மற்றும் அல் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

## 4. இஸ்லாம் கூறும் நிலைபேண் தன்மை 'Sustainability in Islam'

உலகில் உயர்ந்த படைப்பாக மனிதனை படைத்து அவன் விரும்பியவாறு இயற்கை சூழலை பயன்படுத்த அல்லாஹ் அவனுக்கு அதனை வசப்படுத்திக் கொடுத்தான். மனிதன் அவனது இன்பகரமான வாழ்விற்காக இப்பூவுலகை வளப்படுத்தும் அதிகாரத்தை அல்லாஹ் வழங்கி இருக்கின்றான். இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

- "அவனே வானங்களிலுள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தையும் தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான்" (அல்குர்ஆன் 45:13).
- மேலும் "அவன்தான் உங்களை பூமியில் இருந்து படைத்து அதனை வளப்படுத்துமாறு கேட்டுக் கொண்டான்"(அல்குர்ஆன் 11:61).

படைப்பினங்களை வசப்படுத்திக்கொடுத்த இறைவன் மனிதன் அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் அதற்குறிய வரையறையையும் விதிக்காமல் இல்லை. மேலும் மறுமையில் அவை பற்றி கேள்வி கேட்கப்படும் என்று கூறுவதன் ஊடாகவும் வரம்பு மீறுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று கூறுவதன் ஊடாகவும் மக்கள் கட்டுக்கோப்பான நடுநிலையான வாழ்க்கை முறைகளை பின்பற்றுவதற்கான அடிப்படைகளை விதித்து அதன்படி நடக்க வேண்டும் என்பதை இஸ்லாம் வழியுறுத்துகின்றது. இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்.

- ✓ ‘‘மேலும் நீங்கள் உண்ணுங்கள்; பருகுங்கள் விரயம் செய்யாதீர்கள். விரயம் செய்வோரை அவன் (அல்லாஹ்) நேசிப்பதில்லை’’ (அல்குர்ஆன் 7:31).

இவ்வாறு வரையறைகளை விதிப்பதன் மூலம் மனிதன் சூழலில் அத்துமீறுவதை இறைவன் தடை செய்துள்ளான். சூழலை தேவைக்கு மாத்திரமே பயன்படுத்துவதை இஸ்லாம் கூறுகின்றது. இதனையே இன்றைய சமூகம் ‘நிலை பேண் தன்மையாக’ அடையாளப்படுத்துகிறது. நிலை பேண் தன்மை என்பது சூழலியல் வளங்களை உத்தம மட்டத்தில் பயன்படுத்தி எதிர்கால சந்ததிக்கும் விட்டு வைப்பதை வலியுறுத்துகின்றது. இதனையே இஸ்லாமும் கூறுகின்றது. சூழலில் உள்ள வளங்களை வரையறையோடு பயன்படுத்துமாறு வலியுறுத்துகின்றது. இங்கு இஸ்லாம் நிலை பேண் தன்மை எனும் சொற்பதம் இல்லாமல் குறிப்பிட்டாலும் அதன் அடிப்படை எண்ணக்கரு நிலை பேண் தன்மையை மையமாகக் கொண்டதாகவே உள்ளது.

நிலைத்தன்மை எனும் சொற்பதம் அண்மைய நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருவதாகும். சுற்றுச்சூழல் அத்துமீறி மனிதனால் சுரண்டப்பட்டு அதன் பாதக விளைவுகளை மனித உணர ஆரம்பித்த பின்னர் அவற்றை சீரமைக்கும் நோக்கில் மனிதனால் முன்வைக்கப்பட்ட ஒரு தீர்வாகவே நிலை பேண் தன்மை எனும் எண்ணக்கரு காணப்படுகின்றது. உதாரணமாக நன்னீர் அத்துமீறி வரையறையற்ற பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு அதனை மாசுபடுத்தி உவர்த்தன்மைக்குள்ளாக்கிய பின் நன்னீருக்கான தட்டுப்பாட்டை உணர்ந்து இருக்கும் நிலையில் நன்னீரை முறையான விதத்தில் பயன்படுத்துவது தொடர்பாக நீர் மையப்படுத்திய நிலைபேண் பயன்பாடு முன்வைக்கப்படுகின்றது.

ஆனால் இதே நிலைபேண் எண்ணக்கருவை 14ஆம் நூற்றாண்டிலேயே இஸ்லாம் தீர்க்கதரிசனமாக கூறியுள்ளது. வளங்களை வினைத்திறனான விதத்தில் பயன்படுத்துவது குறித்து இஸ்லாம் தெளிவாக வரையறை விதித்துள்ளது.

- ✓ “வானத்தை உயர்த்தி சமநிலையில் வைத்தான், அந்த சமநிலையை மீறிவிட வேண்டாம், சமநிலையை நீதியாகப் பேணுங்கள், அதில் குறைபாடு செய்யாதீர்கள் (அல்குர்ஆன் 55:7,8,9).

இவ்வசனம் மூலம் நிலைபேண் தன்மை குறித்து திருக் குர்ஆன் எடுத்துரைப்பதை காணக் கூடியதாக உள்ளது. அந்த அடிப்படையில் நீர்வள பாதுகாப்பு குறித்து இஸ்லாம் பல்வேறு விதத்திலும் தெளிவுபடுத்துகின்றது. நீரின் மூலக்கூறுகள் என்ன? நீர் மாசுபாடு என்றால் என்ன? என்பது தொடர்பாக அறியாத ஒரு காலத்திலேயே அதன் பயன்பாட்டில் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

- ✓ அப்துல்லா இப்னு அம்ர் இப்னு அல் ஆஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரழி) அவர்களை

கடந்து செல்லும்போது, அவர்கள் வுழூ செய்வதைக் கண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் ஏன் இவ்வளவு வீண்விரயம் என ஸஅத் (ரழி) அவர்களிடம் வினவியபோது வுழூ செய்வதிலுமா? என வினயதற்கு, நபியவர்கள் ஆம், ஓடும் ஆற்றில் இருந்தாலும் சரியே என பதிலளித்தார்கள்'', இச்சம்பவம் நீரை வீண்விரயம் செய்வதை நபியவர்கள் தடுத்துள்ளார்கள் என்பதை காட்டுகின்றது.

நீரின் மகத்துவத்தை உணர்த்தும் விதமாக அவுஸ்திரேலியாவின் பிரபல தூய்மையான குடிநீரை வழங்கும் நிறுவனம், தனது தண்ணீர் பாட்டில்களில் ''ஓடும் தண்ணீருக்கு அருகில் இருந்தாலும் தண்ணீரை விரையம் செய்யாதீர் – முஹம்மத் நபி (ஸல்)''- எனும் வாசகத்தை பதித்துள்ளது.

இஸ்லாமியர்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாக தொழுகை உள்ளது. தொழுகையை நிறைவேற்ற முன்னர் உடலை 'வுழூ' சுத்தம் செய்வது கட்டாய கடமையாகும். இச்சந்தர்ப்பங்களில் கூட நீரை வீண்விரயம் செய்வதை இறை தூதரவர்கள் தடுக்துள்ளார்கள். தம் வாழ்வில் வுழு செய்வதற்கு ஒரு கைபிடி அளவு நீரையே பயன்படுத்தியள்ளார்கள். ஒரு கைபிடி அளவு என்பது 250 ml விட குறைவாகும். நபி (ஸல்) அவர்கள் 3l அளவு கொண்ட நீரில் குளித்து தமது உடலை சுத்தம் செய்து கொள்வார் என குறிப்பிடப்பட்டுள்ளது. தமது வாழ்வில் இறைத்தூதர் நீரின் சிக்கன பயன்பாட்டை கடைபிடுத்துவந்தமை இதன் மூலம் புலனாகின்றது.

இன்று பெரும்பாலான நோய்கள் நீரினால் பரவுகின்றன, எனவேதான் நீர் வள பாதுகாப்பு குறித்தும் இஸ்லாம் கவனம் செலுத்தியது. நீர் நிலைகளில் தூய்மையைப் பேண வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

- ✓ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் எவரும் தேங்கி நிற்கும் தண்ணீரில் சிறுநீர் கழிக்கவும் வேண்டாம். பின்னர் அதில் குளிக்கவும் வேண்டாம். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் (ஸஹீஹ் முஸ்லிம் : 475).

இஸ்லாம் பல்வேறு சுற்று சூழல் அம்சங்களிலும் நிலை பேண் தன்மை எண்ணக்கருவை வலியுறுத்துவதை காணலாம்.

மேலும் இஸ்லாம் மர நடுவதை ஊக்குவிக்கின்றது. மரநடுகை இன்றைய யகத்தில் காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படக் கூடிய பல்வேறு பாதிப்புகள் உணரப்பட்டு அதன் தாட்பரியத்தை குறைப்பதற்காக முன்வைக்கப்பட்ட தீர்வுகளில் முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. 16ம் மற்றும் 17ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னர் படிப்படியாக அதிகரித்த காலநிலை மாற்ற செயற்பாடு பாரிய பாதகத்தை தோற்றுவத்தது. இச்சூழ்நிலை 20ம் நூற்றாண்டுகளிலேயே உணரப்பட்டன. இதனால் தோற்றுவிக்கப்பட பாதிப்புகள் குறைக்கப்பட வேண்டும் எனும் கருத்து வலுப்பெற்று.

இதற்காக முன்வைக்கப்பட்ட முக்கியமான தீர்வுகளில் ஒன்றாக மரநடுகை வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் காலநிலை மாற்றம் தொர்பாக எந்தவித எண்ணக்கருவும் தோற்றுவிக்கப்படாத ஒரு காலத்தில் முன் கூட்டியே மர நடுகை தொடர்பாக இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.

- ✓ முஸ்லிம் ஒருவர் ஒரு மரத்தை நட்டு அல்லது விதைவிதைத்து விவசாயம் செய்து, அதிலிருந்து (அதன் விளைச்சலை அல்லது காய்கனிகளை) ஒரு பறவையோ, ஒரு மனிதனோ அல்லது ஒரு பிராணியோ உண்டால் அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்குக் கிடைக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்நபி மொழியானது இஸ்லாத்தில் மர நடுகை ஊக்குவிப்பதோடு சுற்றுச் சூழலிற்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது. அதேவேளை முஸ்லிம் மக்களை சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தூண்டுகின்றது.

மேலும் மரம் வளர்ப்பதை இஸ்லாம் ஊக்கிவிக்கும் செயன்முறை தொடர்பாக நோக்கின்

- ✓ ‘‘உங்களில் ஒருவரின் கையில் மரச்செடியொன்று இருக்கும் நிலையில் மறுமை வந்து விட்டது என்றிருந்தாலும் அவர் அச்செடியை நாட்டிவிடட்டும்’’ (ஆதாரம்: அஹ்மத்) என்பது நபிமொழியாகும்.
- ✓ ஆத்தோடு ‘‘ஒருவர் ஓர் இறந்த பூமியை உயிர்ப்பித்தால் அது அவருக்குச் சொந்தமாகிவிடுகின்றது’’ (அஹ்மத், அபூதாவூத், திர்மிதி) என ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மரங்களுக்கும் கண்ணியம் வளங்கும் மார்க்கமாக இஸ்லாம் காணப்டுகின்றது. இதனை பின்வரும் வரலாற்று சம்பவம் மூலம் அறியலாம்.

- ✓ ‘‘நான் அன்சாரிகளுள் ஒருவருக்குச் சொந்தமான பேரீத்தை மரத்தின் மீது கற்களை எறிந்தேன், அவர்கள் என்னை நபி (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். ஓ ராபி! எதற்காக நீங்கள் அவர்களது பேரீத்த மரத்தின் மீது கற்களை எறிந்தீர்? என அவர் என்னிடம் கேட்டார். அதற்கு நான் ஓ அல்லாஹ்வின் தூதரே பசியின் காரணமாக, என பதிலளித்தேன். ஆதற்கவர், அவைகளின் மீது கற்களை எறிய வேண்டாம். விழுபவற்றை உண்ணுங்கள். அல்லாஹ் உங்களை பூரணமாக்கி தாகத்தை தனிக்கட்டும், என்றார்கள்’’.

இதன் மூலம் மரங்கள் மீது கற்களை எறிவதை கூட இஸ்லாம் தடுததிருப்பது புலனாகின்றது. மேலும் மரங்களை வெட்டுவதையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது.

- ✓ ஷஹீஹ் அல்-ஜமீ இல் 6352 வது ஹதீஸாக இடம் பெற்றுள்ளதாவது, ''எவர் ஒரு நிழலை கொடுக்கும் மரத்தை வெட்டுகிறாரோ, அல்லாஹ் அவனது தலையால் நரகத்தில் தள்ளுவான்'' என்பதாக இடம்பெற்றுள்ளது.

மேலும் போர்க்காலங்களிலும் மரங்களை வெட்டுவது தடுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் இஸ்லாம் மரங்களை வெட்டுவதை தடுத்து மரங்களை வளர்ப்பதை ஊக்குவித்துள்ளதை நோக்கலாம்.

சுத்தம் அல்லது தூய்மை நிலைபேண் தன்மையின் முக்கிய அம்சமாகும். அந்த அடிப்படையில் இஸ்லாத்தில் தூய்மையின் முக்கியத்துவம் குறித்து பல்வேறு வடிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ✓ முஸ்லிம் ஹதீஸில் 381வது ஹதீஸ்க பதிவாகியுள்ளதாவது ''தூய்மை ஈமானின் பாதியாகும்'' என்பதாகும்.
- ✓ மேலும் ''அல்லாஹ் அழகானவன் அழகையே அவன் விரும்புகின்றான்'' (ஸஹீஹ் முஸ்லிம் : 147).

இஸ்லாம் தன்னை மாத்திரம் சுத்தமாக வைத்திருப்பதை வலியுருத்தவில்லை. சுற்றத்தையும் தூய்மையாக வைத்திருப்பதை கட்டாயப்படுத்தியுள்ளது. அதனை பின்வரும் ஹதீஸ் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

- ✓ ''அல்லாஹ் அழகானவன், அவன் அழகையே விரும்புகிறான் (நூல் : முஸ்லிம் 147)
- ✓ அல்லாஹ் தூய்மையானவன் அவன் தூய்மையை விரும்புகிறான்.
- ✓ உங்களின் முற்றங்களை தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (திர்மிதி).

பின்வரும் ஆல்குர்ஆனிய வசனங்களும் தூய்மை மற்றும் அலங்காரத்தை வலியுறுத்தும் வகையில் அமைகின்றது.

- ✓ ''ஆதமுடைய மக்களே..! ஒவ்வொரு தொழும் இடத்திலும் உங்கள் அலங்காரத்தைச் செய்து கொள்ளுங்கள் (அல் குர்ஆன் 7:31).

மேற்சொன்ன அல்குர்ஆனிய வசனங்களும் நபிமொழிகளும் சுற்றுப்புறச் சூழலின் தூய்மை பேணுவது இஸ்லாத்தில் எந்தளவுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டுகிறது. தன்னையும் சுற்றுப்புரத்தையும் தூய்மையாகவும் அலங்கரித்தும் வைத்திருப்பது நிலைபேண் தன்மைக்கு வலிவகுக்கும். ஆக்கபூர்வமான, மனித சமூகத்திற்கு நன்மை பயக்கக் கூடிய அனைத்துக் கருமங்களும் நிலைபேண் தன்மைக்கு வழிவகுக்கும். அச்செயற்பாடுகளை இஸ்லாம் "இபாதத்" என கருதுகின்றது. இதனையே நபியவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டார்கள்:

- ✓ “அநியாயம் செய்யும் நோக்கமோ, அத்துமீறும் நோக்கமோ இன்றி, எவரொருவர் ஒரு கட்டடத்தைக் கட்டினாரோ அல்லது ஒரு பயிரை நட்டாரோ அதனைக் கொண்டு றஹ்மானுடைய படைப்புகள் நன்மையடையும் காலமெல்லாம் அவருக்கு நிலையான நற்கூலி கிடைத்துக் கொண்டேயிருக்கும் (அஹ்மத்).

பொதுச்சேவைகள் சுற்றுப்புறத்தை சீரமைப்பதோடு நிலையாக வளம் மிக்க ஒரு சமூகத்தை தோற்றுவிக்கும். அனைத்து வகையான சமூக சேவைகளையும் இஸ்லாம் வணக்கமாகவே கருதுகின்றது.

- ✓ “மக்களுக்குத் தீங்கு செய்யக் கூடிய கற்கள், முட்கள் போன்றவற்றைப் பாதையிலிருந்து அகற்றிவிடுவதுகூட ஓர் இபாதத்தாகும்,, (முஸ்லிம்).
- ✓ முஸ்லிம்களுக்குத் தீங்கு இழைக்கக்கூடிய, பாதையில் விழுந்திருந்து ஒரு மரக்கிளையைப் பாதையிலிருந்த நீக்கிய ஒரே காரணத்திற்காக சுவர்க்கம் நுழைவிக்கப்பட்ட ஒரு மனிதரைப் பற்றி ஹதீஸ் குறிப்பிடுகின்றது. (முஸ்லிம்).

இச்செயற்பாடுகள் பொது இடங்களை தூய்மையாக வைத்திருப்பதை வலியுறுத்தும் செயற்பாடுகளாகும். இவை அனைத்தும் ஒரு எழில்மிகு சூழலை வடிவமைப்பதில் பங்குவகிப்வையாகும். மேலும் சுற்றுப்புறத்தின் தூய்மையை சீர்குழைக்கும் செயற்பாடுகள் அனைத்தும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட ஒன்றாக கருதப்படுகின்றது.

- அபூ“ஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், சாபத்திற்குரிய இரு செயல்களைத் தவிர்த்து விடுங்கள் என்று கூறினார்கள். மக்கள், சாபத்திற்குரிய அவ்விரு செயல்கள் என்ன, அல்லாஹ்வின் தூதரே? என்று கேட்டார்கள். அதற்கு, மக்களின் நடைபாதையில், அல்லது அவர்களின் (ஓய்விடங்களான) நிழல்களில் மலம் கழிப்பதுதான் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் : 448)

இது தவிர இஸ்லாம் மீள்சுழற்ச்சி ‘Recycle’ தொடர்பாக 14ம் நூற்றாண்களிலேயே எடுத்தியம்பியுள்ளது. அத்தோடு சரிசெய்து பாவித்தல் ‘Repaire’ என்பவற்றையும் இஸ்லாம் ஆதரிக்கின்றது எனலாம். எடுத்துக்காட்டாக,

- ‘‘ஒருமுறை அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம், நபி (ஸல்) அவர்கள் வீட்டில் இருக்கும்போது அதிகம் என்ன செய்வார்கள் என வினவப்பட்ட போது, நபி (ஸல்) அவர்கள் காலணிகளை பழுதுபார்த்தல் மற்றும் துணிகளை சரிசெய்தல் போன்ற சாதாரணமான வேலைகளை தமது கைகளாளே செய்வார்கள் என பதிலளித்துள்ளார்கள் (ஆதாரம்: அல் அபானி).

இதன் மூலம் நபி (ஸல்) அவர்கள், தமது சமூகத்திற்கு நல்ல முன்மாதிரியாக செயற்பட்டுள்ளமையை காணலாம். இன்றைய காலங்களில் போதிக்கப்படும் ‘Zero waste’ தொடர்பான வழிகாட்டுதலை அன்றே நபியவர்கள் காட்டித்தந்துள்ளதை நோக்கலாம்.

இதுதவிர இஸ்லாத்தில் உயிர்பல்வகைமை தொடர்பாகவும் அதிகளவில் அக்கறை காட்டப்பட்டுள்ளது எனலாம். ஏனெனில் மனிதன் ஏனைய உயிர்களுடன் அன்பாக நடக்க வேண்டும் என்பதனை பல நபிமொழிகள் உருதிப்படுத்தியுள்ளன. எடுத்தக்காட்டாக:

- ஒரு பெண் அதிக நல்லமல்களை செய்தபோதிலும் அவள் ஒரு பூனைக்கு உணவளிக்காமலும் அதனை கட்டிவைத்து, சித்திரவதை செய்த காரணத்தால் அப்பெண்ணை நரகவாதி எனவும், ஒரு விபச்சாரப் பெண் ஒரு நாய்க்கு நீர் புகட்டிய காரணத்தால் அவள் சுவர்க்கம் நுழைவாள் என்ற புகாரியில் பதிவாகியுள்ள ஹதீஸூம் இதனை தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறாக இஸ்லாத்தில் சூழற்தொகுதியின் கூறுகளை பாதுகாக்கும்படி வழியுறுத்துவதை காணலாம். இச்செயற்பாடு சூழலை பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கும் வழங்குவதை ஊக்குவிக்கின்றது. இச்செயற்பாடே இன்றைய நவீன யுகத்தில் நிலைபேண் எண்ணக்கருவாக கருதப்படுகின்றது. இவை தொடர்பாக அறியப்படாத ஒரு காலத்தில் எடுத்தியம்பப்ட்டுள்ளமை அதிசயிக்கும் அம்சமாகும்.

## 5. சூழலின் நிலைபேண் தன்மையின் புறக்கனிப்பும் ஏற்பட்டுள்ள விளைவுகளும்

இஸ்லாம் சூழலின் நிலை பேண் அபிவிருத்தியை வலியுறுத்துவதோடு அதனை மீறுவதை தடுத்துள்ளது. மனிதன் இயற்கை சூழலை தமது தேவைக்கு ஏற்றால் போல் மாற்றியமைக்கும் போது இயற்கையின் சமநிலையை பேணுமாறும் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். ஆதனை பின்வரும் திருமறை வசனத்தின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

- “பூமியை சீராக வளப்படுத்திய பினனர் அதில் நாசம் செய்யாதீர்கள். (அல்குர்ஆன் 7:56)

பூமியை மனிதன் தன் வாழ்வுக்காக வளப்படுத்தி சீராக்கிய பின்னர் மிதமிஞ்சிய பயன்பாட்டினால் நிகழும் பின்விளைவுகளால் இயற்கைச் சூழல் மாசடைவை தவிர்ப்பது குறித்து இந்த வசனம் வழியுறுத்துகின்றது. மேலும் பின்வரும் வசனத்தினூடாக மனிதன் இயற்கைச் சூழலை பயன்படுத்தும் போது அதனால் விளையும் அனுகூலங்களுக்கும் பிரதிகூலங்களுக்கும் மனிதனே பொறுப்பு என்றும் எனவே அவன் பிரதி கூலங்களைத் தவிர்க்க விழிப்புணர்வு உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதையும் பின்வரும் அல்குர்ஆன் வசனம் எடுத்துக்காட்டுகின்றது.

- "எவர் ஒர் அணுவளவு நன்மை அல்லது தீமை செய்திருந்தாலும் அதற்குறிய பலனை அவர் கண்டுகொள்வார்'' (அல்குர்ஆன் 99:7,8).

மனிதனின் நடத்தைகளால் பௌதீக, சமூக சூழல்களில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதன் விளைவுகளை மனிதன் கண்டு கொள்வான் என்பதையே இவ்வசனம் பேசுகிறது. பின்வரும் அல்குர்ஆன் வசனமும் அதே விடயத்தை தான் கூறுகின்றது.

- ''மனிதர்களில் கைகள் தேடிக்கொண்ட காரணத்தால் கடலிலும் தரையிலும் குழப்ப நிலை தோன்றின. அவர்கள் (அதிலிருந்து) திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே அவற்றில் சிலவற்றை அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்'' (அல்குர்ஆன் 30:41).

மனிதன் உலகில் சுகபோகமாக வாழ்வதற்கான மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் இன்று சூழலின் இயற்கைத் தன்மையை மாற்றியமைத்துள்ளது. இதனால் நிலம், நீர், காற்று என்பனவற்றில் ஏற்பட்டுள்ள மாசுபாடு இன்று அவனையே தாக்கும் நிலையை காணமுடிகின்றது. வானிலை மற்றும் காலநிலை மாற்றம், உலகம் வெப்பமாதல், பச்சை வீட்டு விளைவு, ஓசோன் சிதைவு போன்ற பாதகமான விளைவுகளை மனிதன் அனுபவிக்க நேரிடுகிறான். மனிதனின் கரங்கள் தேடிக்கொண்ட இப்பாதகமான விளைவுகள் அல்லாஹ்வின் ஏனைய படைப்பினங்களின் வாழ்வுக்கும் அச்சுறுத்தலாக அமைந்து விடுகின்றன. மேலும் மனிதன் தனது மோசமான பழக்கவழக்கங்களினால் தன்னைத் தானே பால்படுத்திக் கொள்கின்றான்.

- "படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பம். அவனது குடும்பத்தின் மீது அன்பு காட்டுபவனே அவனது படைப்பில் அவனுக்கு மிகவும் விருப்பத்துக்கு உரியவன்'' (ஆதாரம்: புஹாரி).

உலக வளங்களில் அதாவது அல்லாஹ்வின் குடும்பத்தில் மனிதன் மட்டுமே சிந்தித்து செயல்படக் கூடியவனாவான். எனவே அவனது நடவடிக்கையால் பூமியில் விளையும் அனைத்து விளைவுகளுக்கும் அல்லாஹ்விடம் பொறுப்புக் கூற வேண்டியவனும் அவனே. எனவே இயற்கையின் சமநிலை குழம்பாத விதத்தில் அவனது வாழ்வை உலகில் நெறிப்படுத்திக் கொள்வது அவனது பொறுப்பாகும்.

இஸ்லாம் நிலைபேண் தன்மையை வலியுறுத்தி சுற்றுச் சூழலை போதுகாப்பதை தூண்டுகின்றது. ஆனால் மனிதன் அதனை புறக்கணித்து சுற்றுச் சூழலை சீர்குழைப்பதன் மூலம் இன்றைய தலைமுறை பல்வேறு பாதிப்புகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பல பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன. இப்பிரச்சினைகளை மையமாக கொண்டு உருவெடுக்கும் அனர்த்தங்களும் அண்மை காலமாக அதிகரித்து வருகின்றது.

- ‘‘பொழுது உதிக்கும் வேளையில் அவர்களை பேரிடி முழக்கம் பிடித்துக் கொண்டது. பின் அவர்களுடைய ஊரை மேல்கீழாக புரட்டி விட்டோம். சுடப்பட்ட களி மண்ணாலான கற்களைப் பொழியச் செய்தோம்’’ (15:74)

இவ்வசனத்தை உண்மைப்படுத்தும் வகையில் ஜோர்தான் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் காணப்படுகின்றன. இவை வானிலிருந்து அதிக வேகத்தில் வரும் விண்கற்களின் அதிர்ச்சி அலைகள் ‘cosmic blast wave’ பூமியைத் தாக்கியதால் புவி நடுக்கம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- ‘‘பூமியை, அதன் ஓரங்களில் நாம் குறைத்து வருவதை அவர்கள் காணவில்லையா?.....’’(13:41)

இவ் அல்குர்ஆன் வசனம் மூலம் கடல் மட்ட உயர்வு குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் காரணமாக புவி வெப்பமடைவதனாலும், பனிப்பாறைகள் உருகுவதனாலும் கடல் மட்டம் உயர்வடைவதாக அண்மைய ஆய்வுகளில் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக 1400 ஆண்டுகளிற்கு முன்னரே அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. அல்குர்ஆனில்

- ‘‘அல்லாஹ் அருளிய ஆகாரத்திலிருந்து உண்ணுங்கள் பருகுங்கள் பூமியில் குழப்பஞ்செய்து கொண்டு திரியாதீர்கள்’’ (அல்குர்ஆன் 2:60).
- ‘‘அல்லாஹ் உனக்கு நல்லதைச் செய்திருப்பதைப்போல், நீயும் நல்லதைச் செய்! இன்னும் பூமியில் குழப்பம் செய்ய விரும்பாதே: நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை நேசிப்பதில்லை’’ (அல்குர்ஆன் 28:77)

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் புவியில் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்களை தவிர்ந்துகொள்ளுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளதை காணலாம். மேலும்

- ‘‘மனிதர்களில் கைகள் தேடிக்கொண்ட (தீச்செயல்களின்) காரணத்தால் கடலிலும் தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின: (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கின்றான்’’. (அல்குர்ஆன் 30:41)

இவ்வசனம் மக்களை இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக அச்சமூட்டி எச்சரிக்கை வெய்வதனை காணலாம். அதற்கு மேலும் வலு சேர்க்கும் வகையிலே இன்றைய ஆய்வுகள் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதில் மானிட காரணிகளே அதிகம் செல்வாக்கு செலுத்துவதாக குறிப்பிடுகின்றன.

மேலும் அல்லாஹ், பூமியில் மனிதன் குழப்பம் செய்வதை வன்மையாக எச்சரிக்கை செய்துள்ளான். இங்கு குழப்பம் செய்தல் என்பது, தொழிற்துறை மாசுபாடு, சுற்றுச்சூழல் சேதம், மற்றும் பொறுப்பற்ற சுரண்டல், இயற்கை வளங்களை தவராக நிர்வகித்தல் உள்ளிட்ட அனைத்து வகையான செயல்களும் ஆகும். இதனையே அல்குர்ஆனில் ‘‘இன்னும் அவர்கள் பூமியில் குழப்பம் செய்துகொண்டே திரிகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நவீன காலங்களில் மிதமிஞ்சிய நீர் பயன்பாடு மற்றும் நீர் மாசுபாடு காரணமாக 750 மில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீரின்றி பாதிக்கப்படுகின்றனர். அசுத்தமான குடிநீர் பயன்பாட்டின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் 485 000 பேர் வயிற்றுப் போக்கின் காரணமாக இறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான பாதிப்புகளை தடுப்பதற்கு நீரை முறையான விதத்தில் பயன்படுத்துவதற்கும், வீண்விரயத்தை தடுப்பதற்கும், நீர் சுத்தீகரிப்பிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட வருகின்றது. இச்செயன்முறையையே இஸ்லாம் வலியுறுத்துவதை காணக் கூடியதாக உள்ளது.

வன அழிப்பானது இன்றய காலங்களில் சர்வ சாதாரனமாக இடம் பெற்றுவரும் செயன்முறையாகும். 1990 களில் இருந்து இன்று வரையில் 420 மில்லியன் ஹெக்டேயர் வனம் இழக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 2015 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதயில் வருடாந்தம் 10 மில்லியன் ஹெக்டேயர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்ட்டுள்ளது. இவ்வன அழிப்பானது பல்வேறு பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றது. மரங்கள் ஒளித்தொகுப்பு செயன்முறையினால் சூழலில் காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயுவின் சமநிலையை பேணுகின்றது. காடுகள் அழிகப்படுதனால் வளிமண்டலத்தில் $CO_2$ வின் அளவு அதிகரிக்கின்றது. இதனால் புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம் கடல் மட்ட உயர்வு போன்ற அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்பாதிப்புகளின் விபரீதத்தை தடுக்கும் வகையில் அண்மைய நூற்றாண்டுகலாக மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கின்றது. அதனை இஸ்லாம் சுற்றுச் சூழலில் எவ்வித பாரிய மாற்றமும் ஏற்படாத ஒரு காலத்திலேய மரம் வெட்டுவதை தடுத்து மர வளர்ப்பை ஊக்குவிப்பதை காணமுடிகின்றது.

## 6. முடிவுரை

இன்று எமது புவி எதிர்நோக்கியுள்ள ஆபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வுகள் மற்றும் பசுமைக் கருத்துக்களில் மிகுந்த ஆர்வமுள்ள நிலையில் இதுதொடர்பாக நபியின் வழிகாட்டுதலின் பிரதிபலிப்பு பொருத்தமானது ஆகும். நபிவழி அணுகுமுறையில தனித்துவம் யாதெனில் பசுமை நடைமுறைகளிற்கும் மறுமையின் வெகுமதிக்கும் இடையில் அவர் நிறுவிய தொடர்பு காரணமாக முஸ்லிம்கள் எந்தவொரு உலக ஆதாயத்தையும் விட அதிகமான ஊக்கத்தை

ஏற்படுத்துகின்றது. எனவே வளங்களை பாதுகாக்க அதிக முயற்சிகளை மேற்கொள்ள தூண்டுகின்றது எனலாம்.

இயற்கைச் சூழலை சீரழிவுக்குட்படுத்தும், அசிங்கப்படுத்தும் செயற்பாடுகள் சாபத்துக்குரியவை என இஸ்லாம் சொல்கிறது. நீர்வளங்களை சுத்தமாக வைத்திருப்பதன் முக்கியத்துவத்தையும் நிழல் தரும் மரங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தும் இந்த நபிமொழிகள் மூலம் மனித சமூகம் நிறையவே படிப்பினை பெறவேண்டியுள்ளது. எனவே இஸ்லாம் இயற்கை வள பாதுகாப்பு குறித்தும் சுற்றுச்சூழலைப் பேணுவது குறித்தும் அதீத அக்கரை செலுத்துகின்ற மார்க்கமாகும் என்பது புலனாகின்றது.

இஸ்லாமிய நம்பிக்கைகள், மரபுகள், மற்றும் மதிப்புகள் மனித இனம் எதிர்கொள்ளும் தற்போதைய சுற்றுச்சூழல் சவால்களிற்கு ஒரு பயனுள்ள மற்றும் விரிவான தீர்வை வழங்குகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களை பாதுகாத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் ஒரு பாரம்பரியத்தை இஸ்லாம் கொண்டுள்ளது. இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தின்படி இயற்கையின் அடிப்படை கூறுகளான நிலம், நீர், நெருப்பு, காடு மற்றும் ஒளி என்பன மனிதர்களுக்கு மட்டுமல்ல. ஏனைய எல்லா உயிரினங்களிற்கும் சொந்தமானது.

மேலும் அல்குர்ஆனில் சூழலியல் குறித்து பல குறிப்பிட்ட குறிப்புக்களைக் கொண்டுள்ளதோடு சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான சில முக்கியமான கொள்கைகளையும் கொண்டுள்ளது. எனவே சுற்றுச் சூழல்குறித்த இஸ்லாமிய போதனைகளை வழிநடத்தும் ஒரு கலீபாவாக மனிதன் கருதப்படுகின்றான். கலீபா எனப்படுவது அல்லாஹ்வின் பிரதிநிதி அல்லது பாதுகாவலர் எனலாம். எனவே மனிதன் தனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வளங்கள் அல்லது சொத்துக்களை அடுத்த தலைமுறையினருக்கு முடிந்தவரை வீண்விரயம் செய்யாது, தூய்மையான வடிவத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். இஸ்லாத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு மனிதனும் இயற்கையின் பாதுகாவலன் எனவே மற்ற உயிரினங்களுடன் இணக்கமாக வாழ வேண்டும். அத்தோடு சுற்றுச்சூழலை மதித்தல், வளர்த்தல் மற்றும் கவனித்தல் முஸ்லிம்களின் கடமையாகின்றது. இதனையே பின்வரும் ஹதீஸ் மூலம் விளங்களாம்.

- ''இந்த உலகம் இனிமையானதும், பசுமையானதும் ஆகும். அதில் உங்களை அல்லாஹ் பொறுப்பாளராக ஆக்கி, நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள் என்று பார்க்கிறான்'' (முஸ்லிம்).

இஸ்லாம் சூழலை பேணி பாதகாப்பதை சூழல் மாசுபடுத்தப்படாத நவீனம் விருத்தியடையாத காலத்திலேயே நிலைபேண் தன்மை குறித்தும் அது மீறப்படும் போது ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் தெள்ளத்தெளிவாக எடுத்தியம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, நாம் அனைவரும் இஸ்லாம் கற்றுத்துத் தந்துள்ள மற்றும் விழிப்பூட்டியுள்ள கண்ணோட்டத்தில் சுற்றாடலின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் போது, சுற்றாடல் எமது ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நிச்சயம் வழிசமைக்கும் என்பது உறுதி.


உசாத்துணைகள்

Al-Quran: Quranic Verses on Environment

Al-Hadeeths: Sahih al-Bukhari and Sahih al-Muslim

https://youtu.be/qotgELWlE1E

https://youtu.be/OJSClm0x1qs

https://youtu.be/qotgELWlE1E

https://youtu.be/tQU309GDW4A

https://youtu.be/jf-VwRfsRj8

https://www.ecomena.org/sustainability-islam/

http://www.khaleafa.com/khaleafacom/value-of-trees-in-islam

https://www.worldwildlife.org/threats/water-scarcity